இலங்கை திறந்த பல்கலைக் கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டத் திணைக்களம்

சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 3

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 1 – 2022/2023

LLU 3604 – அரசியலமைப்புச் சட்டம் I

நேரம் : 1 மணித்தியாலம்

---

திகதி: 20.08.2023 காலம்: பி.ப. 1.30 – பி.ப 02.30

---

**ஒரு** வினாவிற்கு மட்டும் விடையளிக்க.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "அரசியலமைப்பு வாதம் என்பது அரசாங்க செயல்களினுடைய நெறிமுறையாந் தன்மையினை ஆளும் ஒரு கோட்பாடாகும். அரசியலமைப்பு வாதம் என்பது எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசியலமைப்புக்கள் தொடர்பாக ஒரு அரசின் பரந்த தத்துவவியற் விழுமியங்களுடன் இணங்குவதாகும். அரசியலமைப்பு வாதமானது "சட்ட வலிதான் தன்மை" என்ற கருத்தினை விட மிக முக்கியமான, முன் நிர்ணயிக்கப்பட்ட சட்ட விதிகளின் படி, உத்தியோக பூர்வ நடத்தையினைத் தேவைப்படுத்தும் ஒன்றைக் குறிக்கின்றது. அரசியலமைப்பு வாதமானது அதிகார மட்டுப்பாடு, வலுவேறாக்கம் மற்றும், பொறுப்பு வாய்ந்த பொறுப்புடைமையைக் கொண்ட அரசாங்கக் கோட்பாடு என்பவற்றினைப் பரிந்துரைக்கின்றது."

   -Hilaire Barnett, *Constitutional & Administrative Law* ($4^{th}$ edn., Cavendish Publishing: London 2002) 05-06.

   மேலுள்ள கூற்றினை பொருத்தமான சட்ட அதிகாரங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் என்பவற்றின் துணை கொண்டு கணிக்க.

   (20 புள்ளிகள்)

2. 1796 இல் இடம்பெற்ற இலங்கை மீதான பிரித்தானியப் படையெடுப்பானது, 2300 ஆண்டுகளுக்கும் மேலான சிங்கள முடியாட்சியின் முடிவின் தொடக்கத்தினை குறித்தது. 1815 ஆம் ஆண்டின் கண்டியப் பொருத்தனை ஆனது கண்டிய மன்னரைப் பதவி நீக்கம் செய்து, மக்களின் இறைமையினை பிரித்தானிய முடிக்கு வழங்கியது. இதனைத் தொடர்ந்து, பிரித்தானிய ஆட்சியானது இலங்கையின் அரசியலமைப்புப் பயணத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்கமானது 1833 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளிற்கிடையே செயற்படுத்தப்பட்ட முக்கியமான அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் வரிசையில் தெளிவாகிறது. இந்த சீர்திருத்தங்கள் மூலம், பிரித்தானிய அதிகாரசபைகள் நாட்டின் விருத்தி அடைந்து வரும் தேவைகளை எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

மேற்தரப்பட்ட கூற்றினை 1833 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளிற்கிடையில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறைந்தது இரண்டு முக்கிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது